# 2022/2023 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக நுழைவு

## விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவத்தில் (கௌரவ) விஞ்ஞானமாணிப் பட்ட பாடநெறி

**மொழி மூலம் : ஆங்கிலம்**

மேற்படி பாடநெறிக்கு விண்ணப்பதாரர்களை தெரிவு செய்யும் பொருட்டு, நுண்ணறிவுப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பாடநெறிக்கான நுண்ணறிவுப் பரீட்சையை **ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்** மற்றும் **களனி பல்கலைக்கழகம்** ஆகிய மூன்று பல்கலைக்கழகங்களும் கூட்டாக இணைந்து நடத்த தீர்மானித்துள்ளன. விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவத்தில் (கௌரவ) விஞ்ஞானமாணிப் பட்ட பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், தங்களின் விருப்பப்படி மேலுள்ள ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்திற்கு நுண்ணறிவுப் பரீட்சைக்காக விண்ணப்பிக்கலாம். அவர்கள் தகுதி பெறும் பல்கலைக்கழகத்தை தேர்ந்தெடுப்பது தொடர்பில் இது எவ்வித செல்வாக்கும் செலுத்தாது.

நுண்ணறிவுப் பரீட்சை தொடர்பான விண்ணப்பிக்கும் முறை, தேவையான ஆவணங்கள், மற்றும் மேலதிக விடயங்கள், என்பவற்றை பின்வரும் இணையத்தள முகவரியினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

**www.sjp.ac.lk - ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்**

கொடுக்கப்பட்ட இணைய தொடர்பினூடாக விண்ணப்பதாரிகள் இணையதளத்தில் விண்ணப்பிக்க வேண்டியதுடன் "**ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்**", கணக்கிலக்கம் **097-1-001-7-001-4075, மக்கள் வங்கி, கங்கொடவில கிளைக்கு** கட்டணம் செலுத்திய **1,500/=** ரூபாவிற்கான வங்கி பற்றுச் சீட்டினை ஸ்கேன் செய்து அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதி திகதி – அக்டோபர் 08ம் திகதி, 2023**

**நுண்ணறிவுத் தேர்வுக்கான நேர அட்டவணை பின்வருமாறு:**

| தேர்வு | திகதி | நேரம் |
|---|---|---|
| எழுத்துத் தேர்வு | 23.10.2023 | மு.ப. 09.00 – மு.ப. 10.00 |
| செயன்முறைத் தேர்வு | 23.10.2023 | மு.ப. 11.30 – பி.ப. 06.00 |
| | 24.10.2023 | மு.ப. 08.00 – பி.ப. 06.00 |

பதிவாளர்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
கங்கொடவில
நுகேகொடை
11.09.2023